# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.183/ 2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 6 |
| Name | : மருத்துவர் பாண்டி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026.

--------

1, 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்பரங்குன்றம், அரசு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.10.2016ம் தேதி பணி மருத்துவமராக உசிலம்பட்டி, அரசு தலைமை மாவட்ட மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மதியம் 1.20 மணிக்கு மள்ளப்புரத்தை சேர்ந்த பாண்டிசெல்வி, வயது:21 மற்றும் பஞ்சவர்ணம், வயது:48 ஆகிய இருவரும் காயம்பட்டு மருத்துவமனைக்கு வந்தார்கள். அவர்களை பரிசோதனை செய்ததில் சுயநினைவுடன் காணப்பட்டார்கள். அவர்களை விசாரித்தபோது தனக்கு தெரிந்த 3 நபர்கள் கம்பால் தனது வீட்டின் அருகில் காலை 11.00 மணிக்கு தாக்கியதாக கூறினார்கள். அவர்களில் பாண்டிசெல்விக்கு ஒரு 5x1 cm அளவில் கிழிந்த காயம் நடுநெற்றியில் காணப்ட்டது. பஞ்சவர்ணத்திற்கு இடது புற நெற்றியில் 5x2 cm அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவர்களுக்கு உள்நோயாளியாக சிகிச்சையளித்தேன். காயம்பட்டவர்களை 21.12.2016 அன்று மேல்சிகிச்சைக்காக தேனி, அரசு மருத்துமனை மருத்துவக் கல்லூரிக்கு பரிந்துரை

செய்தேன். காயம்பட்டவர்கள் தேனி, அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்கு செல்லாததால் அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்து வழங்கவில்லை. இதுசம்மந்தமாக பாண்டிச்செல்விக்கு நான் கொடுத்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.2. பஞ்சவர்ணத்திற்கு கொடுத்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3. இதுசம்மந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பாண்டிச்செல்விக்கு ரத்தப்போக்கு இருந்ததாக காயச்சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஒரு ஆயுதத்தை வைத்து தாக்கும்போது உடம்பில் எந்த அளவிற்கு ஆயுதம் படுகிறதோ அந்த அளவிற்கு காயம் ஏற்படும் என்றால் சரிதான். கல்லால் தாக்கினால் குத்துக்காயம் ஏற்படும் என்றாலும், நான் கூறிய கிழிந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் கிழிந்த காயம் வர வாய்ப்பில்லை. காயத்தின் திசை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவர்கள் கரடு, முரடான இடத்தில் கிழே விழும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி-கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.12 14:56:13 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.